செய்தி வெளியீடு எண்– 497 நாள்.19.8.2009

**வீ.வ.(ம) ந.வ.(ந.வ4.2) துறை**

# பத்திரிக்கை செய்திக் குறிப்பு

1. திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப்பகுதிக்கான முழுமைத் திட்டம் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (1972ம் வருட தமிழ்நாடு சட்டம் 35) பிரிவு 28ன் கீழ் அரசாணை எண்.374, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 29.8.1996ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்தின்படி முழுமைத் திட்டம் அமலுக்கு வந்த நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் அல்லது அரசின் அறிவுரைப்படி உள்ளூர் திட்டக் குழுமப் பகுதிக்கு தற்கால வளர்ச்சிகளின்படி அளவை மற்றும் ஆய்வு செய்து புதுநிலைப்படுத்தப்பட்ட முழுமைத் திட்டத்தினை மறு ஆய்வு இணக்கத்திற்கு உள்ளூர் திட்டக்குழுமத்தால் சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது.

2. அவ்வாறு நகர்ஊரமைப்பு ஆணையர் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக்குழுமப் பகுதிக்கான முழுமைத் திட்டத்தினைஅரசு ஆய்வு செய்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 24ன் கீழ் இணைக்கமளித்து பிரிவு 26ன் கீழ் இணக்கத்தினை பிரசுரம் செய்திட உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு இசைவளிக்கப்பட்டு அரசாணை(நிலை) எண். 237, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 7.7.2005ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

3. மேற்படி முழுமைத் திட்டத்தின் மீது பொது மக்கள் மற்றும் அரசுத் துறைகளில் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை பெற்று இயற்கை வளங்கள், மக்கள் தொகை நில உபயோகங்கள், பகுப்பாய்வு உத்தேசங்கள் மற்றும் நில உபயோக வகைப்படுத்துதல், நில உபயோக அட்டவணை நிலையிலுள்ள மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள நில உபயோகங்கள் அனைத்தையும் ஆய்வு செய்து புதுநிலைப்படுத்தப்பட்ட முழுமைத் திட்டம் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் பரிசீலித்து அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதி இடத்தையும் மக்களின் அதிகபட்ச நலன் கருதியும், போதிய வசதிகள் நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகள், பொருளாதார நோக்கு, சுகாதாரமான வசதிகள் வாழ்வதற்கான பாதுகாப்பான சுற்றுச்சூழல், மற்றும் பொருளாதார சிறப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு முழுமைத் திட்டம் புதுநிலைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தயார் செய்யப்பட்ட திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதிக்கான புதுநிலைப்படுத்தப்பட்ட முழுமைத் திட்டத்திற்கு அரசாணை (எம்.எஸ்) எண். 143, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 11.8.2009ல் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

முதன்மைச் செயலாளர்,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.